www.lkdu.lk

தரம் – 10
தமிழ்

iVins Tamil Education

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2021 (2022)

www.ivinstamil.com

பெயர் :.....

நேரம் : ஒரு மணித்தியாலம்

பகுதி - I

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. விலங்கல் திண்தோள் கைவீரக் களிறு - இங்கு விலங்கல் எனப்படுவது
   1) யானை 2) மலை 3) வலிமை 4) நன்மை

2. பரிக்காலும் தேர்க்காலும் வழும் - இங்கே பரி என்பது
   1) குதிரை 2) பவளம் 3) சூரியன் 4) தேர்

3. நாவலர் அவர்களின் காசம் எதிர்பாராத அனுகூலம் அளித்தது. அனுகூலம் என்பதன் எதிர்கருத்து
   1) சாதகமான 2) தீமை 3) பிரதிகூலம் 4) நன்மை

4. வைகித்தோன்றும் தீராப் பாதகம் - பாதகம் என்பதன் எதிர்பதம்
   1) அசாதகம் 2) வியாபகம் 3) ஆதங்கம் 4) சாதகம்

5. தென்னையின் இளையது பிள்ளை நெல்லின் இளையது
   1) பிள்ளை 2) நாற்று 3) கன்று 4) குட்டி

6. ஆந்தை அலரும் - குரங்கு
   1) கரையும் 2) கதரும் 3) கத்தும் 4) குட்டி

7. எழுப்பத்தைந்தாம் ஆண்டு நிறைவில் கொண்டாடும் விழா
   1) வெள்ளி 2) பொன் 3) பவளம் 4) அமுதம்

8. பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம் - அப்பீல் என்பதனால் கருதப்படுவது
   1) வாதாட்டம் 2) மேன்முறையீடு
   3) தீர்ப்பு 4) விசாரணை

9. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
   1) அடவி - ஆராணியம் 2) மலை - குன்று
   3) யாக்கை - உடம்பு 4) சிங்கம் - கரி

10. சனங்களின் தொகுதி திரள் என்பது போல மயில்களின் தொகுதி
   1) கூட்டம் 2) குழாம்
   3) ஓலக்கம் 4) எய்ப்பில் வைப்பு



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

11. அழகான நடைவண்டி கிலுகிலுப்பை ஏற்படுத்தியது. இங்கு கிலு கிலு என்பது

1) அடுக்குமொழி
2) இணைமொழி
3) இரட்டைக்கிளவி
4) அடுக்கிடுக்கு மொழி

12. இழை, பனுவல், நூல் என்பன குறிக்கும் பொருள்

1) உலகம்
2) புத்தகம்
3) கவி
4) பூமி

13. மிதமிஞ்சிய ஆசை ஆபத்தானது மிதமிஞ்சிய என்பதற்கு நிகரான சொல்

1) முறை கேடான
2) அநீதியான
3) அளவுக்கதிகமான
4) கணிசமான

14. தொடர்பாடல்துறையில் இடம்பெறும் Mass culture என்பது குறிக்கும் தமிழ் வடிவம்

1) கலாசாரம்
2) வெகுசன பண்பாடு
3) நாகரிகம்
4) பழக்கவழக்கம்

15. வினைத் தொகைக்கு உதாரணமாக அமைவது

1) எறிந்தவேல்
2) இராப்பகல்
3) வட்டமேசை
4) ஓடுமீன்

16. தண்டேன் என்பன பிரித்தெழுதினால்

1) தண்டு + ஏன்
2) தண் + டேன்
3) தன்மை + ஏன்
4) தண்மை + தேன்

17. அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே என்ற பழமொழி மூலம் வலியுறுத்தப்படுவது

1) நன்றியுணர்வு
2) துரோகத்தனம்
3) நிராதனம்
4) நேர்மை

18. அது இப்படி காலை வாரியும் எனக்கு புத்தி வரவில்லை. காலை வருதல் என்ற மரபுத் தொடர் உணர்த்துவது

1) கால் இடறல்
2) ஏமாற்றுதல்
3) காலூன்றல்
4) எதிர்த்து நிற்றல்

19. உலோபினுடைய பொருள் பிறரால் களவாடப்படும் எனும் பொருள் தரும் பழமொழி

1) ஈயார் தேட்டை தீயார் கொள்வார்.
2) அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே.
3) உண்ணாச் சொத்து மண்ணாய் போகும்.
4) எரிகிற வீட்டில் பிடிங்கினது இலாபம்.

20. புத்திமான் பலவான் எனும் பழமொழியின் கருத்து

1) பலசாலியாக இருப்பவர்கள் புத்திசாலியாக இருப்பான்.
2) புத்திசாலியான ஒருவன் பல ஆண்டுகளுக்கு நிகரானவன்.

www.lkdu.lk

3) புத்திசாலியான பலம் மிகவும் அவசியமானது.

4) புத்திசாலியாக இருப்பவனே உண்மையான பலசாலியாவான்.

21. டுஷானன் அலுவலகத்தில் இருந்தான் அவனைத் தேடி அப்பா வந்தார். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள மாற்றுப்பெயர்

1) அலுவலகம் 2) டுஷானன்

3) அப்பா 4) அவன்

22. பண்புப் பெயர் விகுதியாக அமைவது

1) இ 2) அ, உம் 3) மை, ஐ 4) ஆ, ய்

23. நடத்திலன் என்பதில் எதிர்மறை இடைநிலை

1) அன் 2) ந் 3) நட 4) இல்

24. நெல் குவியல் போல மலர்

1) செண்டு 2) குவியல்

3) மாலை 4) திரள்

25. ஆடு மேய்ப்பவன் ஆயன் கப்பல் செலுத்துபவன்

1) பாகன் 2) இடையன்

3) மாலுமி 4) சாரதி

26. சிப்பந்தி மேஸ்திரி எம்மொழிச் சொல்லாகும்

1) அரபு 2) பாரசீகம்

3) பிரெஞ் 4) போர்த்துகீசம்

27. ஆக்கப் பெயரடைக்கு உதாரணமாக அமைவது

1) நல்ல புத்தகம் 2) சிறிய சட்டை

3) பெரிய மரம் 4) வேகமான குதிரை

28. பறவைகள் பறந்தன எவ்வகைத் தொடராகும்.

1) எழுவாய்த் தொடர் 2) வினித்

3) வேற்றுமைத் 4) இடைச் சொற்

29. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு

1) நிந்தகம் 2) மஞ்சரி

3) மாராயம் 4) சங்கநிதி

30. மரத்திலிருந்து பழம் விழுந்தது - இது எத்தனையாம் வேற்றுமை

1) ஐந்தாம் 2) ஆறாம்

3) ஏழாம் 4) எட்டாம்

www.lkdu.lk

புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

31. மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் ஒழிப்பு பற்றிய ..... ஏற்படுத்தப்பட்டது.

1) பிரகடனம்
2) கோரிக்கை
3) விழிப்புணர்வு
4) உடன்படிக்கை

32. அரச ஊழியர்களால் முன்வைக்கப்பட்ட ..... அரசாங்கத்தால் நிறை வேற்றப்பட்டன.

1) விடயம்
2) பிரசாரம்
3) கோரிக்கைகள்
4) பிரகடனம்

33. அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான தகவல்கள் .... வெளியாகியது

1) வர்த்தமானி
2) பத்திரிகை
3) அறிக்கை
4) சுற்றுநிருபம்

34. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே அபிவிருத்திக்கான ..... கைச்சாத்திடப்பட்டது

1) ஒப்பந்தம்
2) பிரகடனம்
3) ஒத்துழைப்பு
4) உத்தரவாதம்

35. தேசிய ..... காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருட்கள் எமது நாட்டின் வரலாற்றை உணர்த்துகின்றன.

1) சுவடிகள் காப்பகத்தில்
2) ...பவனத்தில்
3) நூதன சாலையில்
4) காட்சிகூடத்தில்

36. எமது பாடசாலை தாபிக்கப்பெற்ற 80ம் ஆண்டு நிறைவடைந்தமையை கொண்டாடும் முகமாக ..... இடம்பெறவுள்ளது.

1) மணிவிழா
2) அமுதவிழா
3) பவளவிழா
4) வெள்ளிவிழா

கீழே தரப்பட்ட பாடசாலை அடிப்படையாக கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

தேடிச் சோறு நிதம் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி
வாடித் துன்பம் மிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்
வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ

37. இக் கவிதை உணர்த்தும் அடிப்படைப் பொருள்

www.lkdu.lk

1) தற்பெருமை
2) தன்னலம்
3) தன்சரிதை
4) தன்நம்பிக்கை

38. இங்கு கூற்றுக்கு இரை என்ற தொடர் குறிப்பது

1) உணவு
2) மரணம்
3) ஜனனம்
4) யமன்

39. சின்னஞ்சிறு கதைகள் என இங்கு குறிப்பிடப்படுவது

1) மிகச்சிறிய கதைகள்
2) சிறுகதைகள்
3) பயனற்ற கதைகள்
4) கேலிக்கதைகள்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் ஒழுங்கான பந்தியொன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. ஆயினும் தமிழ்நாட்டைப் பற்றியும் தமிழ்மொழியைப் பற்றியும் அவர் ஒரு சிறு குறிப்பும் குறிக்கவில்லை.

ஆ. அது போலவே அவர் குறிப்பிட்டவொரு காலத்தில் வாழ்ந்தாராயினும் காலத்தை கடந்த பொதுக்கருத்துக்களையே கூறினர்.

இ. திருவள்ளுவர் தமிழ்நாட்டில் வாழ்ந்தார் தமிழ்மொழி பேசினார்.

ஈ. அதனால் தான் உலகப்பொது நூலாக விளங்குகிறது.

உ. இவ்வாறு இடத்தையும் சூழ்நிலையும் கடந்து நிலவும் பொதுக் கருத்துக்களை திருக்குறளில் காணலாம்.

1) உ ஆ அ இ ஈ
2) ஈ உ அ ஆ இ
3) இ ஆ அ ஈ உ
4) இ அ ஆ உ ஈ

(40 புள்ளிகள்)

www.lkdu.lk

பெயர் :.....

பகுதி - II

(1) சுருக்கமான விடை தருக.

(i) பின்வரும் தொடரை சந்திபிரித்து எழுதுக.

மெலிந்தப் பிறைக்கும் விழி

(ii) "புத்தகத்தை எடுத்துட்டு வூட்ட வா மனே" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எடுத்து வழக்காக மாற்றி எழுதுக.

(iii) "ஒற்றைக்காலில் நிற்றல்" என்ற மரபுத் தொடர் குறிக்கும் சொல்?

(iv) "சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமற்றவை" மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக.

(v) உயர் குறிக்கோள், ஒருவர் உண்டும் உணவினும் பருகும் நீரினும் அவருக்கு இனியது - இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது?

(vi) கம்பன் இராம கதையைக் காவியமாகப் பாடினான். அதனால் கவிச் சக்கரவர்த்தி என்ற புகழைப் பெற்றான். இவ்விரு வாக்கியங்களில் கூறப்பட்ட விடயங்களை ஒரே வாக்கியத்தில் எழுதுக.

(vii) படிக்காத அந்தப் பையன் பரிதாபமாக நின்றான். இவ்வாக்கியத்தில் காணப்படும் பெயரெச்சம் யாது?

(viii) தொழில் முறைக் கடிதத்தின் உறுப்புக்கள் எவை?

(ix) சுருக்கம் எழுதும் போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் 2 தருக.

(x) பின்வரும் வாக்கியத்தின் வழுக்களை நீக்கி மீண்டும் எழுதுக. **(20 புள்ளிகள்)**

நகரத்தில் கொடிய நோய்கள் வருமானால் அது பரவுவதற்கு முன்னரே அதைத் தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

(2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.

(i) இன்றை தொடர்பு சாதனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவற்றின் வளர்ச்சி சின்னத்திரை உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனடிப்படையில் இன்று ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நாடகங்களினால் ஏற்படும் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் பற்றிய விளக்கக் கட்டுரை.

www.lkdu.lk

(ii) வருடந்தோறும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்கள் நமது சமூகத்தின் உயிர்த்துடிப்பான தாய், சகோதரி, தாரம், மகள் என அவர்கள் குடும்பத்தில் வாழ்பவர்கள் அதற்கு மேலே பல வழிகளிலும் உழைப்பவர்கள் அவர்களைப் போற்றுதலும் பாதுகாத்தலும் நம் கடமை எனற பொருளில் ஒரு மேடைப் பேச்சு

(iii) சிறந்த ஆளுமை உடையவர்களாலேயே வாழ்க்கையில் உயர்நிலை அடைய முடியும். ஆளுமை என்பது பன்முகப் பட்ட ஆற்றல்களின் தொகுதியாகும். ஆதலால் ஒருவன் ஆளுமை உடையவனாய் இருப்பது அவன் பெற்ற கல்வித் தகைமைகளால் மாத்திரம் சாத்தியப்படாது. பாட விதானத்துக்கு அப்பால் கலை, இலக்கியம், விளையாட்டு முதலான துறைகளிலும் பரிச்சயம் உடையவனாய் இருத்தல் வேண்டும். அதை உணராது ஏனைய விடயங்களில் ஈடுபடுவது படிப்பை பாழாக்கிவிடும் என்ற கொள்கை உடைய மாணவன் ஒருவனுக்கும் அவ்வாறன்றி கல்விற் போலவே இணை பாட விதானச் செயற்பாட்டிலும் ஈடுபடுவது உயர்வுக்கு வழி வகுக்கும் என்ற கொள்கையுடைய மாணவன் ஒருவனுக்கும் இடையிலான ஓர் உரையாடல்.

(iv) கண்ணன் எனது வகுப்பில் வந்து சேர்ந்த போது அவன் மற்ற மாணவர்களைப் போல இருக்கவில்லை படிப்பில் நாட்டமற்று இருந்தான். எனினும் அவன் கல்வியில் முன்னேறி மிகப்பெரிய பட்டங்களையும் உதவியையும் பெற்றவனாக இருக்கிறான். அவனை உருவாக்க ஆசிரியராக இருந்து நான் பட்ட பாடுகள் எண்ணிலடங்கா... என்று தொடங்கும் ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

(3) பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

அன்பு, பரிவு, மனித உறவு, சொந்தபந்தம், மனநிறைவு அறிவார்ந்த ரசனை முதலியவை மனிதனுக்கு வசதிகளும் நலன்களும் தருகின்றன. மிகவும் நெருக்கம் தருகின்றன. பண்பாடு அத்தகைய காரியங்களைச் செய்கிறது. எனவே தான் மனிதன் பண்பாடு பற்றி மிகவும் அக்கறை எடுத்துக்கொள்கிறான். என்கிறார். டெர்ரி ஈகிள்டன் வர்க்கம், சாதி, சமயம் மொழி, இலக்கியம் முதலியவற்றின் வழியாகவும் அவற்றின் குணங்களாகவும் பண்பாடு வெளிப்படுகிறது. ஒற்றைக் கருத்திலோ ஒற்றைக் குரலிலோ வெளிப்படுவதல்ல பண்பாடு. பலவகைப் பரிமாணங்கள் அதற்கு உண்டு. அதனால் ஒருங்கிணைந்த ஒரு கூட்டுமொத்த வடிவமும் உயிர்ப்பும் அதற்கு உண்டு. மேலும் எந்தப் பண்பாடும் தனித்து இருப்பதில்லை. பிற பண்பாடுகளோடு உறவு கொண்டே வாழ்கிறது. ஒரு சமூகக் குழுவோ இனமோ தனித்து இயங்குவதில்லை. இருப்பதில்லை அது போலவே பண்பாடுகளும் அருகருகே சேர்ந்து வாழ்கின்றன தொடர்பு கொள்கின்றன.

பண்பாடுகள், எதிர் எதிரே நெருன்ன நிள்றின்ற போது அவற்றின் தனித்தன்மைகளும் மரபுகளும் சிறப்புக்களும் மற்றும் நிகழ்காலத்தின் நிலைகளும் முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய முரண்பாடுகளின் காரணமாக சமூக அமைப்புகளின் செயற்பாடுகளிலும் பிரச்சினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

(10 புள்ளிகள்)

www.lkdu.lk

(04) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பழந்தமிழ் இலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தை கவரும் சிறந்த பண்பு ஒன்றே உலகம்" எனும் உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி என்ற அமெரிக்கா அறிஞர் எழுதி வெளியிட்ட ஒரே உலகம் (one world) எனும் நூலை மக்கள் இனிதாக வரவேற்றனர். இந்நூற் கருத்தானது உலகம் தழுவியதாக இருந்ததால் இருபதாம் நூற்றாண்டில் ஏனையோர்க்குப் பெரு மகிழ்வு அளித்தது. இது பற்றி தமிழராகிய நாம் சிறு புன்முறுவெல் அரும்பி நிற்கிறோம். ஏன்? இருபது நூற்றாண்டுகட்டு முன்னமே தமிழறிஞர் இதனை இனிது உணர்ந்திருந்தனர். இதற்கு "யாதும் ஊரே யாவருங் கேளிர்" எனும் பாடல் இடம் பெறும் புறநானூறு தக்க சான்றாகும். இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது? பிறநாட்டு மன்னர்க் உண்டான தொடர்பின் பயன்-ாகவுமே பழந்தமிழர்க்கு இப்பரந்த மனப்பான்பை வாய்த்ததெனலாம்.

மேலே எடுத்துக்காட்டிய ஒரு உலக மனப்பான்மையும் அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும் மற்றொரு சிறந்த பண்புக்குக் காரணமாயின. இது கண்ணோட்டம் எனப்படும். இதனைப் பொறை எனவும் பொருந்தும். தமிழ்மொழி வரலாறு நம் மக்களின் ஒப்பற்ற சமயப் பொறை சான்றாக அமைந்துள்ளது. இலத்தீன் மொழி மேல் நாட்டுச் சமயங்களின் மொழி சமஸ்கிருதம் இந்தியச் சமயங்களின் மொழி. ஆனால் பல சமயத்தவர்களும் உரிமை பாராட்டும் சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு.

(i) *ஒன்றே உலகம் எனும் மனப்பான்மையைத் தமிழர் பழங்காலத்திலேயே பெற்றிருந்தமைக்கு ஆதாரமாக அமைந்த நூல் யாது?*

(ii) *இம் மனப்பான்மையை பழந்தமிழர் பெற்றுக் கொண்டமைக்கான காரணங்களாக பழந்த தமிழர் பெற்றுக் கொண்டமைக்கான காரணங்களாக கட்டுரையாசிரியர் எவற்றைக் கருது கிறார்?*

(iii) *பொறை எனும் பண்புக்கு அடிப்படையாக அமைந்தவை எவை?*

(iv) *தமிழ்மொழியின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?*

(v) *தமிழரிடம் சிறுநகை தோன்றுவதற்கு காரணம் யாது?*

(05) *இயற்கை பசளையை பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்வோம் எனும் வகையில் துண்டுப்பிரசுரம்*

அல்லது

கொரோனா வைரஸின் தாக்கம் பற்றி மக்கள் விழிப்படையும் வகையில் பத்திரிகையில் பிரசுரிக்கும் வகையில் பத்திரிகை ஆசிரியருக்கு கடிதம்.

(15 புள்ளிகள்)

www.lkdu.lk

பெயர் :.....

பகுதி - III

(01) சுருக்கமான விடை தருக.

(i) "ஐ வீரும் ஒரு வீராய் அகல் இடத்தை"

அ - இங்கு 'ஐவீர்' எனக் குறிப்பிடுவோர் யார்?

ஆ - அகலிடம் என்பதன் பொருள் யாது?

(ii) "பொன்னாகமும் நாகமும் நாண நடந்தார்" - இதில் நாகம் என்பதன் இரு பொருளையும் தருக.

(iii) கொடுமையாள அளந்தாளை, ஆர் இவர்? என்று உரை" - இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

(iv) 'மதியினிற் புலை நாத்திகம் கூறுவர்'

அ - இங்கு நாத்திகம் என்பதன் கருத்து

ஆ - மதி என்பதன் பொருள்

(v) "களியும் பிழை பொருட் பள்ளி நன்னூலாம் கடலிலுண்டு"

அ - இவ் அடியில் எச்சிறப்பு காட்டப்பட்டுள்ளது?

ஆ - இங்கு கையாளப்பட்ட அணி யாது?

(vi) மண்ணை நம்பி ஏலேலோ மரமிருக்கு ஐலசா
மரத்தை நம்பி ஏலேலோ கிளையிருக்கு ஐலசா

அ - இப்பாடல் நாட்டார் பாடலின் எவ்வகைக்குள் அடங்கும்?

ஆ - இங்கு இடம்பெறும் ஒலிக்குறிப்புச் சொற்களைத் தருக.

(vii) "வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்" இங்கு

அ - வானரம் என்பது யாது?

ஆ - மந்தி என்பது யாது?

(viii) கணக்காயரில்லாத வூரும் பிணக்கறுக்க மூத்தோரையில்லா வகைக்காணும்

அ - இங்கே மூத்தோர் என்போர் யார்

ஆ - அவைக்களன் என்பதன் பொருள் யாது?

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

(ix) நண்பர் 486 கம்பியூட்டர், 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப் பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்.

அ - இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரபந்தம் யாது?

ஆ - உச்சாடனம் செய்தல் என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

(x) தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடு போல் தாவித்தாவிப் பல பொருள் நாடுவோர்

அ - இங்கு ஆட்டின் செய்கை யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது?

ஆ - முயற்சியற்றவர் இயல்புகள் இரண்டினைத் தருக.

(20 புள்ளிகள்)

(02) பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப்பகுதியையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும் கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர் ஆர் தட்டினும் தட்டுவாராமலே அன்னதானத்துக்கு மார் தட்டிய துரை மால் சீதாக்காதி வரோதயனே

அ - இங்கு சீதாக்காதியின் கொடைச் சிறப்பு எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

ஆ - பஞ்சம் நிலவும் காலத்து அவலநிலையைக் கவிஞர் விபரிக்குமாற்றை விளக்குக.

(ii) ஆடிக்குடத்தடையும் மாடும் போதே இரையும் மூடித்திறக்கின் முகங்காட்டும் - ஓடி மண்டை பற்றிற் பரபரெனும் பாரிற்பிண்ணாக்கு முண்டாம் உற்றிடு பாம் பெள்ளெனவே ஓது

அ - இங்கு பயன்படுத்திய அணி யாது? எவ் எவற்றிற்கு?

ஆ - இங்கு கூறப்பட்ட விடயம் பற்றி விபரிக்குக.

(03) நாவலர் எழுந்தார்

அ - நாவலரின் திறமை, நேர்மை

ஆ - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் சம்பவச் சித்தரிப்புத் திறனும் புலப்படுமாற்றை விளக்குக.

அல்லது

குகப்படலம்

அ - பரதனின் துயரம்

ஆ - கோசலையை அறிமுகம் செய்த விதம் பற்றி விளக்குக.

(04) கம்பியூட்டர்

அ - சிறுகதையில் காணப்படும் வாழ்வியல் அம்சங்கள்

www.lkdu.lk

ஆ - கதையில் நகைச்சுவை உணர்வு இழையோடு பாங்கு என்பவற்றை விளக்குக.

அல்லது

எது நல்ல சினிமா

அ - காட்சிப்படிமம்

ஆ - ஒலி, படத்தொகுப்பு பற்றி விவரிக்கு

5, 6, 7 ஆகிய வினாக்களில் ஒன்றைத் தெரிவு செய்க.

(05) குற்றாலக்குறவஞ்சி

அ - நாட்டுவளம்

ஆ - மலைவனம் - பற்றி விளக்குக.

(06) பாரதியார் சுயசரிதை

அ - பெண் மீது வைத்த காதலுணர்வு

ஆ - தாம் விரும்பியவற்றை அடைய முடியாதவர் இயல்புகள் பற்றி விவரிக்குக.

(07) தனிப்பாடல்

பங்கப்பழனத்துமுழு முழவர் ..... என்ற பாடலில்

அ - சோழ நாட்டின் வளச்சிறப்பு

ஆ - சோழ மன்னனின் வீரம்

(10 புள்ளிகள்)

நன்றி
வளர்மதி கல்விக் கழகம்

www.lkdu.lk

தரம் – 10
கணிதம்

iVins Tamil Education

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2021 (2022)

www.ivinstamil.com

பெயர் :..... நேரம் : 2 மணி 30 நிமிடங்கள்

பகுதி - I

- **A பகுதியில் 5 வினாக்களும், B பகுதியில் 5 வினாக்களுக்குமாக மொத்தம் 10 வினாக்களுக்கு விடை தருக.**
- **ஒவ்வொரு வினாக்களுக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **அடி ஆரை r ஆகவும் உயரம் h ஆகவும் உள்ள செவ்வட்ட உருளை ஒன்றின் வளைமேற்பரப்பு $2\pi rh$ ஆகவும் கனவளவு $\pi r^2 h$ ஆகும்.**

பகுதி - A

1. $y = x^2 - 5$ சார்பை வரைவதற்கு பூரணமற்ற அட்டவணை ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

x	-3	-2	-1	0	1	2	3
y	4	-1	-4	.....	-4	-1	4

(i) $x = 0$ ஆகும் போது y இன் பருமனைக் காண்க.

(ii) x, y அச்சு வழியே 10 சிறு பிரிவுகளை ஓர் அலகாகக் கொண்டு வரைபை வரைக.

(iii) சார்பின் பெறுமானம் அதிகரித்துச் செல்லும் x இன் பெறுமான வீச்சை எழுதுக.

(iv) வரைபின் y அச்சு வழியே ஒரு அலகு கீழ்நோக்கி இடம்பெயரும் போது பெறப்படும் வரைபின் திரும்பற் புள்ளியின் ஆள்கூற்றை எழுதுக.

(v) $x^2 - 5 = 0$ சமன்பாட்டின் மூலகங்களை வரைபின் மூலம் காண்க.

2. வியாபார நிலையம் ஒன்றில் கடந்த மாதத்தில் 30 நாட்களில் 1kg 70 ரூபா ஆகவுள்ள அரிசி விற்கப்பட்ட அளவுகள் பின்வருமாறு

அரிசி அளவு	1- 25	26 - 50	51 - 75	76 - 100	101 - 125	126 - 150
நாட்களின் எண்ணிக்கை	3	6	10	6	3	2

(i) உத்தேச இடையைப் பயன்படுத்தி அல்லது வேறுமுறையில் ஒருநாளில் விற்ற அரிசியின் இடைப் பெறுமானத்தை கண்டு அதனூடா ஒரு நாளில் அரிசி விற்பனையில் ஏற்படும் வருமானத்தைக் காண்க.

(ii) ஒரு மூட்டையில் 50kg அரிசி உள்ளதெனக் கொண்டு குறித்த இடை பெறுமானத்தினூடாக அடுத்த 20 நாட்களுக்காக கடைக்கு தேவையான அரிசி மூட்டையின் குறைந்த எண்ணிக்கையை காண்க.

www.lkdu.lk

3. (i) அடியின் ஆரை 7cm ஆகவுள்ள உருளை வடிவான பால்மா டின் ஒன்றின் உயரம் 20cm ஆகும். வளை பரப்பை முழுமையாக சுற்றுவதற்கு விளம்பரத்தாள் ஒன்றை தயார் செய்தல் வேண்டும் 20cm அகலமான கடதாசி தாள் ஒன்றின் நீளம் 10m ஆகும். அதிலிருந்து மேற்குறித்த விளம்பர அட்டையை வெட்டிய பின் எஞ்சும் கடதாசியின் நீளத்தைக் காண்க.

(ii) 14cm உயரமான உருளை வடிவான நீருள்ள குவளையின் பங்கு குறையாக உள்ளது. நீளம், அகலம், உயரம் முறையே 11cm, 4cm, 5cm ஆகவுள்ள கனவுரு வடிவான ஈயகுற்றி ஒன்று குவளையில் அமிழ்த்தப்பட்டபோது குவளை நிரம்பியது எனின், குவளையின் வெளி மேற்பரப்பின் ஆரையைக் காண்க.

---

4. (i) அடைப்பு நீக்கி சுருக்குக.

$(2x - 3)(3x + 2)$

(ii) காரணிகளைக் காண்க.

$x^2 - 5x - 24$

(iii) $2(x^2 - 9), 3(x^2 - 5x - 24)$ எனும் கோவையின் பொ.ம.சியைக் காண்க.

---

5. A, B, C ஆகியன முறையே அமைந்த மூன்று நகரங்களாகும். மயூரன் தனது வாகனத்தில் நகரம் A யிலிருந்து மணிக்கு 44kmh^{-1} சீரான வேகத்தில் 66km தூரத்தில் அமைந்த நகரம் Bயை அமைந்தார்.

(i) நகரம் A இலிருந்து நகரம் B யிற்கு செல்வதற்கு எடுக்கும் காலத்தைக் காண்க.

(ii) நகரம் B யிலிருந்து 60kmh^{-1} சீரான கதியில் 2 ½ மணித்தியாலத்தில் அவர் நகரம் C ஐ அடைந்தார் எனின் B,C நகரங்களுக்கிடையிலான தூரத்தைக் காண்க.

(iii) அவர் நகரம் A இருந்து B யினூடாக நகரம் C ஐ அடையும் வரையிலான இயத்தின் சராசரி கதியைக் காண்க.

(iv) மடக்கையைப் பயன்படுத்தி $\frac{7285}{4.76 \times 13.08}$ இன் பெறுமானத்தை காண்க.

---

6. (i) $\frac{3}{x+1} - \frac{5}{2(x+1)} = \frac{1}{6}$ தீர்க்க.

(ii) சரண்யா, முரளியிடம் இருந்த பணத்தொகையின் கூட்டுத்தொகை ரூ.200 ஆகும். சரண்யா ரூ.20 முரளிக்கு கொடுக்கும் போது சரண்யாவிடம் எஞ்சிய பணம் முரளியிடம் தற்போதுள்ள பணத்தின் மும்மடங்காகும். சரண்யாவிடம் உள்ள பணத்தை ரூ. x எனவும் முரளியிடம் உள்ள பணத்தை y எனவும் கொண்ட சமன்பாட்டுச் சோடியை உருவாக்கி தீர்ப்பதன் மூலம் இருவரிடமும் ஆரம்பத்தில் உள்ள பணத்தொகையைக் காண்க.

பகுதி - B

7. சிவம் தனது மகனுக்கு ரூ.110000 பெறுமதியான கணனி ஒன்றை வாங்குவதற்கு முதல் மாதத்தில் ரூ.1000 ஐயும் இரண்டாம் மாதத்தில் ரூ.1250 ஐயும் மூன்றாம் மாத்தில் ரூ.500 யும் முறையே சேமிக்க தொடங்கினார்.

(i) அவரின் மாதச் சம்பளம் ரூ 25000 எனின் 12ம் மாதத்தில் அவர் சேமிக்கும் பணம் அவரின் சம்பளத்தின் என்ன சதவீதம் ஆகும்.

www.lkdu.lk

(ii) அவர் 12 மாத முடிவில் சேமித்த மொத்த பணம் ரூ. 28500 எனின் தேவையை இரண்டு வருட முடிவில் நிறைவேற்றும் நோக்கில் இரண்டாம் வருடத்தின் ஆரம்பத்தின் முதல் மாதம் ரூ.4250 எனக் கொண்டு ரூ.500 படி மாதாந்தம் அதிகரித்துச் செல்லும் முறையில் சேமிக்க தொடங்கினார். இரண்டு வருட முடிவில் தனது தேவையை நிறைவேற்ற முடியும் எனக் காட்டுக.

---

8. அமைப்பு கோடுகளை தெளிவாக காட்டும் வகையில் கவராயம், நேர்விளிம்பு மாத்திரம் பயன்படுத்தி கீழ் காணும் அமைப்பை வரைக.

(i) AB = 7cm, ABC = 75^0 AB = BC ஆகுமாறு முக்கோணி ABC ஐ அமைக்க.

(ii) பக்கம் AB ற்கு சமாந்தரமாக C யினூடாக நேர்கோடு ஒன்றை வரைக.


(iii) புள்ளி B யிலிருந்து மேற்குறித்த (ii) இல் வரைந்த சமாந்தர கோட்டிற்கு செங்குத்து BD ஐ அமைக்க.

(iv) நாற்பக்கல் ABCD யினை பூரணப்படுத்தி நாற்பக்கலுக்கு வழங்கும் விசேட பெயரை காரணங்களுடன் எழுதுக.

---

9. O வை மையமாகக் கொண்ட வட்டத்தில் AD நாண் ஆகும். விட்டம் BOC யினால் AD நாண் புள்ளி T யில் இருசமகூறிடப்படுகிறது.

(i) தரப்பட்ட தரவுகளின் படி செங்கோணம் ஒன்றை பெயரிடுக. அதற்கான காரணத்தை எழுதுக.



(ii) $A\hat{D}C = 40^0$ எனின் காரணங்களுடன் கீழ் காணும் கோணங்களின் பருமன்களைக் காண்க.

(a) $A\hat{B}C$ இன் பெறுமானம் காண்க.

(b) $A\hat{O}C$ இன் பெறுமானம் காண்க.

(c) $A\hat{C}B$ இன் பெறுமானம் காண்க.

(d) $O\hat{A}D$ இன் பெறுமானம் காண்க


---

10. முக்கோணி ABC யில் AB = AC ஆகும் புள்ளி C யிலிருந்து AB ற்கு வரையப்பட்ட செங்குத்து CD ஆகும். தரப்பட்ட தரவுகளைக் கொண்டு உருவை வரைந்து அதிலிருந்து BAC = 2BCD என நிறுவுக.

---

11. வளர்மதி கல்விநிலையத்தின் தரம் 10 இன் செயற்திட்டத்திற்கான பூங்செடிகளும், பழக்கன்றுகளும் கல்வி நிலையத்தில் நடுவதற்கு தீர்மானிக்கட்டது. அதற்காக மாணவர்களிடம் ஏதாவது இரண்டு வகை மரக்கன்றுகள் கொண்டுவருவதற்கு அறிவிக்கப்பட்டது.

www.lkdu.lk



தரம் 10 இலுள்ள 43 மாணவர்களுள் 4 பேர் எந்த கன்றுகளும் கொண்டு வரவில்லை. ஏனையோர் ஏதாவது இரண்டு வகையைக் கொண்டு வந்தனர். இரண்டு பூக்கன்றுகள் வீதம் கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆகும். இரண்டு வகையில் ஒன்றை மட்டும் கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

(i) *தரவுகளை வெண் உருவில் குறித்துக்காட்டுக.*

(ii) *பழக்கன்றுகளை கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை யாது?*

(iii) *ரதி இரண்டு பழக்கன்றுகளை கொண்டு வந்தாள் எனின் அவர் அடங்கும் பிரதேசத்தை நிழற்றுக.*

(iv) *இவ் வகுப்பிலுள்ள மாணவர்கள் கொண்டு வந்த மொத்த கன்றுகளின் எண்ணிக்கை யாது?*

---

12. (a) (i) *பெட்டி A இல் அளவில் சமனான 3 சிவப்பு நிற மாபிள்களும் 2 நீல நிற மாபிள்களும் பெட்டி B இல் அளவில் சமனான 2 சிவப்பு நிற பந்துகளும் 3 மஞ்சல் நிற பந்துகளும் உள்ளன. காந்தன் எழுமாறாக பெட்டி A இல் மாபிள் ஒன்றையும் பெட்டி B இல் பந்து ஒன்றையும் வெளியில் எடுத்தான். நிகழக்கூடிய எல்லா நிகழ்வுகளையும் செய்யறி ஒன்றில் காட்டுக.*

(ii) *எடுத்த பொருள் ஒன்றாவது சிவப்பு நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.*

(b) (i) *வெளியில் எடுக்கப்பட்ட மாபிள் சிவப்பு நிறமாதல், சிவப்பு நிறமாகாதல் என்பதனை காட்டும் மரவரிப்படத்தை வரைக.*

(ii) *பந்து ஒன்றைப் பெறும்போது அது சிவப்பு நிறமாகுதல், சிவப்பு நிறமாகாதல் என்பதனைக் காட்டுவதற்கு நீர் வரைந்த மரவரிப்படத்தை விரிவுபடுத்துக.*

(iii) *வெளியே எடுக்கப்பட்ட பொருள்களில் ஒன்றாவது சிவப்பு நிறமாக இல்லாதிருப்பதற்கான நிகழ்தகவை காண்க.*

நன்றி
வளர்மதி கல்விக் கழகம்

சைவ மங்கை பதிப்பகம் - புத்தூர்.

www.lkdu.lk

Grade 10 ENGLISH

iVins Tamil Education

Third term examination - 2021(2022)

www.ivinstamil.com

Name :..... Time: Two Hours

(1) Match Colum A to Colum B

1.	Cobbler	One who sells fruits
2.	Butcher	One who sells meat
3.	Journalist	One who collect new
4.	Fruiter	One who repair shoes
5.	Confectioner	One who sells sweet

(2) Turn the following sentences into passive voices

(1) She bugs Fruits
(2) Father will polish the floor
(3) Mother will wear a new fork
(4) I have bought a car
(5) Kamal had bought a Land
(6) Postman will deliver the letter

(3) Read the following note and write an accept and than king for the invitation to him

Nimal,

My birthday falls on sunday. I'm pleased to invite you a long with a few friends. for the brithday party in my near dance. we can have a nice time. please to come.

Daniel

(4) Read the following notice and answer the questions bolow

NOTICE

an grade 10 students are be requirested to Present in the kamarasamy hall on 15th august. 2022 at 9 am the purpose of the meeting. is to dismiss. about our sports meet thank you

Yours Principal
Pathmanathan



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

(1) To whan this Notice writter?

(2) By whom this Notice writter?

(3) Venue ..

(4) What is the date and time?

(5) What is the Purpose of the meeting?

(5) Read the following description and fill in the grid

Weaver bird

Weaver bird is a small bird. with brown or gray feathers. It has a comical beak. It makes a very elobate nest using dry. grass and .. This nest which hunge from a tree. has Its Cnterance at the bottom of the Nest. It Lags 2 - 6 eggs at a time and Nacubale them for 9 - 20 days. Weaver bird feeds on grains seeds. fruits and insects. It Liuse in wood lands away from busy human setllement

(1) Name

(2) Colour

(3) Beak

(4) Nest

(5) No of eggs at a time

(6) In cubation period

(7) Diet

(8) Habitat

(9) Size

(6) Select the Correct Question words from the blanks to get the given stalenent as an answer

(How, which, why, when, what)

(1) ..... do you prefer to have for lunch? rice and curry

(2) ..... are you crying? My pur... was stuten

(3) ..... is your brothers brithday. Itts on 25th may

(4) ..... do you come to school? By school bus

(5) ..... are you in your family. I am the 2nd

www.lkdu.lk

(7) Match the words under A with their appropriate no

(A)	Difficutt	Natural	
(B)	Boring	Deposit	
(C)	Intelligent	Rude	
(D)	Police	Intresting	
(E)	Atificial	Easy	
(F)	Withdraw	Dull	

(9) Match the inventions with the inventors

A	B
The Radio	Graham bell
Telephone	Wright brothers
Motor car	Galileo
Aeroplane	Sir henry ford
Electric lamp	Thomas alwa edision
X - ray	Wilhelm roentgen

(10) Read the following sentences and change in passive

(1) They cook land

(2) Nimal build a new house

(3) They will organise the match

(4) She write the notice

(5) The people select the president

(6) They take all from coconut

(7) Lunch is cooked by them

(8) We cleaned the house

(9) She buys the house

(10) I play cricket

tamil WE REPORT TO YOU.

www.lkdu.lk

(11) Write an invitation leter to your frien ravi about your birthday and ask them to visit your birthday

(12) Write an excuse letter to your school class teacher about the absent. write to 50 words

(13) Write a notice about the inter school story telling competition

(14) Read the sentences and write them into indirect speech

(1) Rajith say 'I can calculate the amount for birthday'

(2) Raja say 'Who is the incharge for the class'?

(3) Ram say 'Where can me see the drama'?

(4) Mala say 'Where will we can buy the tickets'?

(5) Ravi say 'When will next ... come'?

(6) Siva say 'where is the post office'?

(7) Kagen say ' where can we pay the fee'?

(8) Kugan ask ' who can bring the tickcts'?

(9) Mano ask ' we shall drank milk'?

(10) Maya ask 'where is the canteen'?

tamil WE REPORT TO YOU.

(15) Write a.. essay about the follawing one

(1) Our school sports meet

(2) The envionment pollution

(3) Good food

Adaiyaalam Printers

www.lkdu.lk

தரம் – 10
வரலாறு

iVins Tamil Education

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2021 (2022)

www.ivinstamil.com

பெயர் :.....

நேரம் : ஒரு மணித்தியாலங்கள்

பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

---

1. மகாவம்சத்தின் வியாக்கியான நூலுக்கு வழங்கும் பெயர்

   1) சமந்த பாஷாதிகாவ
   2) மகாவம்சம் II ஆம் பாகம்
   3) திரிபிடகம்
   4) வம்சத்தபகாசினி

2. உலகப்படத்திலே இலங்கையை தப்ரபேன் எனக் குறிப்பிட்ட நபர்

   1) ப்ளினி
   2) தொலமி
   3) இபன்பதூதா
   4) ரிபைரோ

3. தம்பமஸ்ஸ எனும் செப்பு நாணயம் பயன்படுத்தப்பட்ட இலங்கையின் காலப்பகுதி

   1) வரலாற்றுக்காலம்
   2) அநுராதபுரம்
   3) பொலன்நறுவை
   4) கம்பளை

4. கரையோ வெட்டவெளிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அமைந்திருந்த குகைகளுள் ஒன்று

   1) மினிகாகல்கந்த
   2) பண்டாரவளை
   3) அலிகல
   4) பாகியன்கல

5. வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்ட தொழினுட்ட அறிவை அறிந்துகொள்ள உதவும் ஆதாரமாக திகழ்வது

   1) நாணயம்
   2) சிதைவு
   3) இலக்கியம்
   4) கல்லாயுதம்

6. வரலாற்றுக் காலகட்டத்தில் தச்சர்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்த கிராமம்

   1) கசீகாரகாம
   2) வட்டகீகாம
   3) பட்டணகாம
   4) ஒலகம

7. புராதனகால இலங்கையில் பருமகமார் பயன்படுத்திய மயானமாக அமைவது

   1) ஹல்துமுல்ல
   2) பெரகல
   3) கல்சொஹன்
   4) இப்பன்கட்டுவ

www.lkdu.lk

8. பௌத்த சமயத்தை இந்நாட்டில் அறிமுகப்படுத்தியவர்

1) துட்டகைமுனு
2) மகிந்ததேரர்
3) மகாநாமதேரர்
4) மூடசிவன்

9. தலதா மாளிகையின் பாதுகாப்பிற்காக வேளைக்காரப்படையை நியமித்த இலங்கை மன்னன்

1) 1ம் கஜபாகு
2) தேவநம்பியதீசன்
3) 1ம் விஜயபாகு
4) 1ம் காசியப்பன்

10. இரும்பு கைத்தொழிலாளர்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

1) முதுகல்ல
2) வெஹரகெம
3) சொரபொரவெவ
4) அம்பகமுவ

11. அனுராதபுர காலத்தில் கல்வி நிலையமாகவும், சமய நிலையமாகவும் விளங்கிய விகாரை

1) அபயகிரி
2) ருவன்வெலிசாய
3) மகாவிகாரை
4) ஜேத்தவனராம

12. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கருங்கல் கட்டடமொன்றின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்ட இடம்

1) உடரஞ்சாமடம்
2) கித்துல்கல
3) அலிகல
4) ஹல்துமுல்ல

13. பண்டைய கல்வெட்டுக்களில் ராஜ்மொஹால் என அழைக்கப்படுவது

1) அணைக்கட்டு
2) சுருங்கை
3) கலிங்கற்தொட்டி
4) மடைக்கதவு

14. நீளத்தை அளப்பதற்கு பண்டையக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட மிகச்சிறிய அலகு

1) பரமாணு
2) வியத்த
3) ஆங்குல
4) உசக்க

15. தெடிகம எனும் இடத்தில் பிறந்த இலங்கையின் சிறந்த மன்னர்களில் ஒருவர்

1) 1ம் பராக்கிரமபாகு
2) 2ம் பராக்கிரமபாகு
3) 3ம் பராக்கிரமபாகு
4) 4ம் பராக்கிரமபாகு

16. பிராமிய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் புரகமத்த எனும் பதவிப்பெயரின் கருத்து

1) வர்த்தகர்
2) சேனாதிபதி
3) கிராமத் தலைவன்
4) கட்டடக் கலைஞன்

17. இந்தியாவிலிருந்து வந்த இலங்கையை ஆட்சிபுரிந்த முதலாவது மன்னன்

1) எல்லாளன்
2) விஜயன்
3) பண்டுகாபயன்
4) பண்டுவாசுதேவன்

18. பண்டைக்கால இலங்கையின் தாளத்துடன் பாடக்கூடிய கவிதை கண்டெடுக்கப்பட்ட இடம்

1) ஹல்துமுல்ல
2) சிகிரியா
3) கிரிந்த பன்சல
4) அலிகல

www.lkdu.lk

19. கேரளப்படைகளின் உதவியை நாடிய இலங்கை மன்னர்களில் ஒருவன்

1) இளநாகன் 2) 1ம் விஜயபாகு

3) எல்லாளன் 4) காசியப்பன்

20. பிரதான வீதிகளில் கவ்வையிலிருந்து கவ்வைக்கு கற்தூண்களை நடுமாறு கட்டளையிட்ட பொலன்நறுவைக்கால மன்னன்

1) 1ம் பராக்கிரமபாகு 2) கலிங்கமாகன்

3) 1ம் விஜயபாகு 4) நிஸங்கமல்லன்

21. மூன்று தடவைகள் இலங்கையில் ஆட்சிப்பீடமேறிய பெண் அரசி

1) அனுலா 2) லீலாவதி

3) சீவலி 4) கல்யாணவதி

22. மிருகங்களைக் கொல்லக்கூடாது என முதலில் சட்டத்தை இயற்றிய மன்னன்

1) ஆமாண்ட காமினி 2) 4ம் மகிந்தன்

3) புத்ததாஸன் 4) வொகாரிகதிஸன்

23. குளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவோர் செலுத்தவேண்டிய வரி

1) சுங்க வரி 2) போஜக்கபதி

3) தக்கபதி 4) மதரமஞ்சக்க

24. வீராங்குர விகாரைப் பிக்குகளுக்கு 200 தங்கக் குடங்களை வழங்கிய மன்னன்

1) 1ம் உதயன் 2) 4ம் மகிந்தன்

3) 4ம் காசியப்பன் 4) 2ம் அக்கிரபோதி

25. கி.மு. 450 அளவில் அபிவிருத்தியுற்ற இலங்கையின் தென்கிழக்கு பகுதியில் அமைந்திருந்த நகரம்

1) அநுராதபுரம் 2) பொலன்நறுவை

3) காலி 4) மாகம

26. பொலன்நறுவை இராசதானியில் உருவாக்கப்பட்ட ஏழடுக்கு மாளிகை

1) சத்மஹல்பிரசாதய 2) கல்விகாரை

3) கிரிவிகாரை 4) பொத்குல் விகாரை

27. 2ம் பராக்கிரமபாகுவின் நாளாந்த வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் நூல்

1) பரக்கும்பாசிரித 2) கந்தவுரு நுவர

3) சரசோதிமாலை 4) பூஜாவலிய

28. காலி திரிபாஷா கல்வெட்டினை பொறித்தாகக் கருதப்படுபவன்

1) யுங்லோபேரரசன் 2) 4ம் புவனேகபாகு

3) இபன்பதூதா 4) செங்ஹோ

29. கம்பளை காலத்தில் உருவாக்கப்பட்ட முருகன் கோயில்

1) கடலாதெனிய 2) லங்காதிலக

3) எம்பக்கே 4) கல்விகாரை

www.lkdu.lk

30. கண்டி இராச்சிய அரசொன்றை முதன்முதலில் உருவாக்கியவன்

1) 1ம் விமலதர்மசூரியன் 2) 1ம் இராஜசிங்கன்
3) ஜயவீர பண்டார 4) சோனசம்மத விக்கிரமபாகு

31. போர்த்துக்கேயர் கண்டி இராட்சியத்தின் மீது மேற்கொண்ட முதலாவது போர்

1) முல்லேரியா 2) தந்துரே
3) பலன 4) கன்னொருவ

32. கீர்த்திஸ்ரீ இராஜசிங்கனால் சங்கராஜ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சமய பிக்கு

1) ஸ்ரீராகுலதேரர் 2) தர்மசேன தேரர்
3) ஒல்கொட் 4) ஸ்ரீ சரணங்கர தேரர்

33. கண்டி இராட்சியத்தில் பிரதானிகளின் கட்டளைகள், செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்

1) கஜநாயக்க நிலமே 2) கடுபுள்ளே
3) ரட்டேராள 4) திசாவைகள்

34. யானைகள் பிடித்தல் தொடர்பாக விதிக்கப்பட்ட வரி

1) குருவே பத்த 2) மடிகே பத்த
3) ரீ பத்த 4) படஹெல பத்த

35. அரசமாளிகைக்காக பயன்படுத்தப்பட்ட நிலவகை

1) கபாடகம் 2) நிந்தகம்
3) விகாரம் 4) பரவேனிகம

36. கீழைத்தேசத்திற்கு ஆபிரிக்காவைச் சுற்றி கடல்மார்க்கமாக வருகை தந்த முதலாவது போர்த்துக்கேயன்

1) லோரன்ஸ்சோ த அல்மெய்டா 2) பிரான்ஸிஸ் டி அல்மெய்டா
3) வாஸ்கொடகாமா 4) ஸ்பில்பேர்ஜன்

37. 1521 ம் ஆண்டு விஜயபாகு கொல்லயவுடன் தொடர்புபட்ட மன்னன்

1) 5ம் விஜயபாகு 2) 6ம் விஜயபாகு
3) 7ம் விஜயபாகு 4) 8ம் வீரபராக்கிரமபாகு

38. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாண இராட்சியத்தை ஆட்சி புரிந்த மன்னன்

1) பரராஜசேகரன் 2) எதிர்மன்னசி ங்கன்
3) புவிராஜபண்டாரம் 4) சங்கிலியன்

39. ஆபிரிக்காவின் தென்முனையை வந்தடைந்து, அப்பகுதிக்கு புயல்முனை என பெயரிட்டவர்

1) கடலோடி ஹென்றி 2) வாஸ்கொடகாமா
3) காபாட் சகோதரர் 4) பார்த்தலோமியு டயஸ்

40. மொனாலிசா எனும் புகழ்மிகு ஓவியத்தை வரைந்தவர்

1) மைக்கல் ஆஞ்சலோ 2) டொனடொலோ
3) லியானாடோ டாவின்சி 4) மெசெக்ஷியோ **(40 X 2 = 80 புள்ளிகள்)**

www.lkdu.lk

வரலாறு - II

நேரம் : மூன்று மணித்தியாலங்கள்

- **இவ் வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டவை.**
- **பகுதி I இன் முதலாவது வினா கட்டாயமானது.**
- **பகுதி II இன் நான்கு வினாக்களையும் பகுதி III இல் ஒரு வினாவையும் தெரிவு செய்து மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க**

பகுதி - I

(1) *(அ)* *வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் (i) கீழ் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும், வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் (ii) கீழ் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.*

(i) *மல்வத்து ஓயா, கோகர்ண, தம்பதெனியா, பராக்கிரம சமுத்திரம், பாஹியன்கல, மாகம, சிலாபம், ஹல்துமுல்ல, இராவண எல்ல, சீதாவாக்கை, கதுருகொட, கதிர்காமம்*

(12 புள்ளிகள்)

(ii) *யாவா, பர்மா, மலாக்கா நீரிணை, செங்கடல், கோவா, ரோம்*

(6 புள்ளிகள்)

(ஆ) *கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புடைய நபர்களை வரிசைக்கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.*

A - *புயற்காற்றினால் தாக்குண்டு எதிர்பாரா விதமாக இலங்கையை வந்தடைந்த போர்த்துக்கல் நாட்டவன்*

B - *தொலைநோக்கியை கண்டுபிடித்து வியாழனை சூழ உபகோள்கள் உள்ளன என கண்டுபிடித்தவன்*

C - *வசப மன்னன் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தை நிர்வகித்த அமைச்சன்*

D - *திரிபிடக நூலுக்கு மேலதிக விளக்கமான அட்டுவாக்களை எழுதியவன்*

(4 புள்ளிகள்)

(இ) A, B ஆகிய உருக்களை அவதானித்து விடை தருக.

(i) *1. உரு A யில் காட்டப்பட்டுள்ள படத்தினைப் பெயரிடுக.*

2. இதனைப் பொறிப்பித்த மன்னன் யார்?

3. இது அமைந்துள்ள மாவட்டம் எது?

4. இதன் சிறப்பியல்பு யாது?



(4 புள்ளிகள்)

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

(ii) *1.* உரு B யில் காட்டப்பட்டுள்ள படம் யாது?

2. இது உள்ள விகாரை எது?

3. இவ்விகாரை அமைந்துள்ள இராசதானி எது?

4. இவ்வுருவின் மனித உருவம் குறிப்பது எதனை?



(04 புள்ளிகள்)

பகுதி - II

(02) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

(i) பின்வரும் இடங்களில் அமைந்துள்ள குகைகள் / பாசறைகளைப் குறிப்பிடுக.

A - பதிராஜவெல B - பாகியன்கல C - ஹோட்டன் சமவெளி

(03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் தமது உணவுக்காக பயன்படுத்திய தாவர உணவு வகைகள் நான்கினைப் பெயரிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) முன்வரலாற்றுக்கால மக்களிடையே காணப்பட்ட தொழினுட்ப அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) வரலாற்றுக்கால கட்டத்து குடியேற்றத்தின் கட்டமைப்பு, தன்மை பற்றி மூன்று விடயங்களுடாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

(3) (i) சித்துல்பவ்வையை அண்மித்த பகுதியில் வாழ்ந்ததாக இனங்காணப்பட்ட பிரதேச தலைவர்கள் மூவரைக் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(ii) புராதன காலகட்டத்தில் அரசுரிமை கிடைத்த முறைமைகள் இரண்டினைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) பண்டுகாபய மன்னனின் அரசியல் அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) ஆரம்பகால கட்டங்களில் அரசிடமிருந்து நாட்டு மக்கள் எதிர்பார்த்த சேவைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

(4) (i) பண்டைய இலங்கையில் வைத்தியசாலைகளை நிறுவி சேவையாற்றிய மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(ii) 1ம் விஜயபாகு மன்னன் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த உறவுகள் இரண்டினைக் குறிப்பிடு. **(04 புள்ளிகள்)**

(iii) புராதன இலங்கை சமூகத்திர் உள்நாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தமையை இரு ஆதரங்களினூடாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

www.lkdu.lk

(iv) பண்டைய சமூகத்தில் சிறப்பிடம் பெற்றிருந்த கைத்தொழில் அமைப்பு பற்றி மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

(5) (i) A, B, C எனக் குறிப்பிடப்படும் விடயங்களுடன் தொடர்புடைய இடங்களை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A - "வஜ்ரசும்பட்ட" எனப்பட்ட இடிதாங்கி பொருத்தப்பட்டமை

B - வெண்கல யானை விளக்கு கண்டுபிடிக்கப்பட்டமை.

C - நீரை விசிறியடிக்கும் "நீர்ப்பூக்கள்" அமைக்கப்பட்டிருத்தல்

(ஆலாஹன பிரிவெனா, தெடிகம கொட்ட விகாரை, சிகிரிய நந்தவனம், அபயகிரி விகாரை, ருவான்வெலிசாய) **(03 புள்ளிகள்)**

(ii) ஹோபிட்டிகம தூண்கல்வெட்டில் குறிப்பிடப்படும் உள்நாட்டு சந்தை விதிகளை நான்கினைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) முற்கால இலங்கை சமுதாயத்தின் பெண்களுக்கு கிடைத்த இரு முதன்மைகளை குறிப்பிட்டு விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) இலங்கையில் சுதேச உணவுப் பழக்கவழக்க முறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

(6) (i) இரண்டாம் நகராக்க அரசுகள் மூன்றினைக் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(ii) நான்காம் பராக்கிரமபாகுவின் சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) பொலன்நறுவை அரசு தளர்வடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) தம்பதெனியக்கால இலக்கிய, சமய வளர்ச்சி பற்றி மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

(7) (i) இலங்கையை ஆட்சிபுரிந்த ஐரோப்பிய இனத்தவர் மூவரையும் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(ii) 1ம் விமலதர்மசூரியன் பௌத்த சமய விருத்திக்கு ஆற்றிய சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(iii) 1638ம் ஆண்டு உடன்படிக்கையின் முக்கியத்துவங்கள் இரண்டினை விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) போர்த்துக்கேயர் இறுதிவரை கண்டி இராட்சியத்தைக் கைப்பற்ற முடியாமைக்கான காரணங்கள் மூன்றினை விளக்குக. **(06 புள்ளிகள்)**

www.lkdu.lk

பகுதி - III

(8) (i) மறுமலர்ச்சி ஏற்பட்ட மூன்று துறைகளைக் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(ii) மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கு ஏதுவான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) நாடுகாண் பயணங்கள் ஏற்பட்டத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் இரண்டினை விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) ஐரோப்பிய மறுமலர்ச்சியால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மூன்றினை விளக்குக. **(06 புள்ளிகள்)**

(9) (i) திருச்சபையை விமர்சித்த மதப்பெரியார்கள் மூவரைக் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(ii) அரசியல் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(iii) மறுமலர்ச்சிக் காலத்தில் விருத்தியுற்ற கலைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவை பற்றி விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iv) மறுமலர்ச்சியானது இலங்கை மீது ஏற்படுத்திய தாக்கங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

WE REPORT TO YOU.

www.lkdu.lk

தரம் – 10
சமயம்

iVins Tamil Education

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2021 (2022)

www.ivinstamil.com

பெயர் :.....

நேரம் : 3 மணித்தியாலம்

பகுதி - I

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. "நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானங் கற்குஞ் சரக்கன்று காண்" இப்பாடல் எக்கடவுளைக் குறித்துப் பாடப்பட்டுள்ளது?
   1) சிவபெருமான் 2) விநாயகர்
   3) முருகன் 4) விஷ்ணு

2. "பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி..." என இறைவனைப் போற்றிப் பாடியவர்?
   1) திருவள்ளுவர் 2) திருமூலர்
   3) தாயுமானவர் 4) மாணிக்கவாசகர்

3. வேதாந்தம், வேதசிரசு என சிறப்பித்துக் கூறப்படும் நூல்கள்
   1) ஆகமங்கள் 2) புராணங்கள்
   3) இதிகாசங்கள் 4) உபநிடதங்கள்

4. திருமணக்கிரியைகளில் மணமகன், மணமகள் இருவரும் உடலாலும் உள்ளத்தாளும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்துவது?
   1) மாலை மாற்றுதல் 2) இரட்சாபந்தனம்
   3) பால்பழம் புசித்தல் 4) மங்கலநாண் பூட்டுதல்

5. மாணிக்கவாசக சுவாமிகள் "பிடித்த பத்து" பாடிய தலம்
   1) திருப்பெருந்துறை 2) திருத்துருத்தி
   3) தோணிபுரம் 4) திருவாரூர்

6. நாம் மனிதப்பிறவி எடுப்பதன் நோக்கம்
   1) அறிவு பெறுதல் 2) முத்தியின்பம் பெறுதல்
   3) இறைபணி செய்தல் 4) நல்வாழ்வு வாழுதல்

7. பிரமனின் ஆணவத்தை அடங்கும் பொருட்டு சிவனின் அம்சமாகத் தோன்றியவர்
   1) மகாவிஸ்ணு 2) பிரம்மதேவர்
   3) வீரபத்திரர் 4) வைரவர்

8. நாட்டார் கலைகளுள் ஒன்றான அழிந்து போகும் நிலையில் இருந்த கூத்துக்கலையை ஊக்குவித்து மறுவாழ்வு கொடுத்தவர்?
   1) பேராசிரியர் கைலாசபதி 2) பேராசிரியர் சிவத்தம்பி
   3) பேராசிரியர் வித்தியானந்தன் 4) பேராசிரியர் சண்முகதாஸ்

www.lkdu.lk

9. சாம்பவ தீட்சை என்று அழைக்கப்படுவது
   1) சமய தீட்சை
   2) திருவிழாக்கள்
   3) குடமுழுக்கு
   4) ஆசாரிய அபிடேகம்

10. தாமரை மலரில் வீற்றிருப்பவர்
   1) நான்முகன்
   2) இந்திரன்
   3) திருமால்
   4) சிவன்

11. ஆலயத் திருவிழாக்களில் வாகனத்திருவிழாக்கள் குறிப்பது
   1) படைத்தல்
   2) காத்தல்
   3) அழித்தல்
   4) மறைத்தல்

12. மறைஞானசம்பந்தர் இயற்றிய நூல்
   1) நெஞ்சுவிடுதூது
   2) கொடிக்கவி
   3) சதமணித்திரட்டு
   4) சிவஞான சித்தியார்

13. மகோற்சவ கொடிச்சீலை குறித்து நிற்பது
   1) சிவபெருமான்
   2) ஆன்மா
   3) பாசம்
   4) திருவருட்சக்தி

14. சாமவேதத்தில் முக்கியம் பெறுவது
   1) நாடகம் 2) இசை 3) கலை 4) நடனம்

15. கிருஸ்தநிலை என்பது
   1) மாணவநிலை
   2) காடேகு நிலை
   3) சத்திய நிலை
   4) இல்லற நிலை

16. புலிக்கால் முனிவர் என அழைக்கப்பட்டவர் யார்?
   1) வசிட்டர்
   2) வியாக்கிரமபாதர்
   3) வாமதேவர்
   4) சுந்தரி

17. ஞானமே உருவான வடிவம் எது?
   1) சிவவடிவம்
   2) ஞானவடிவம்
   3) குருவடிவம்
   4) தெய்வீக வடிவம்

18. களுதாவளைப் பிள்ளையார் ஆலய தலவிருட்சம் எது?
   1) மருதம்
   2) வில்வம்
   3) அரசு
   4) கொக்கட்டிச் சோலை

19. சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
   1) 1927 2) 1923 3) 1953 4) 1974

20. மரங்களிலிருந்து பெறும் மலர்களை எவ்வாறு அழைப்பர்?
   1) நிலப்பூ
   2) கோட்டுப்பூ
   3) நீரப்பூ
   4) கொடிப்பூ

www.lkdu.lk

21. சிவமுகூர்த்தங்கள் எத்தனை?
1) 63 2) 64 3) 65 4) 67

22. நட்சத்திரங்களின் எண்ணிக்கை யாது?
1) 28 2) 29 3) 27 4) 26

23. தன்னையும் காட்டாது நின்று உயிரின் அறிவை மறைப்பது?
1) ஆணவம் 2) கன்மம் 3) மாயை 4) ஞானம்

24. கோயில் என சிறப்பிக்கப்படும் தலம்
1) சீர்காழி 2) தில்லை
3) திருப்புன்கூர் 4) திருவாரூர்

25. ஆண்மாவின் அறிவை மறைத்து மயக்குவது
1) ஆணவம் 2) கன்மம்
3) மாயை 4) பாசம்

26. சுந்தர மூர்த்தி நாயனார் திருவாரூர் தலத்தில் தியாகேசப்பெருமானை வேண்டி "மற்றைக்கண் தாரீர்" என பாடிய பதிகம்
1) மீளா அடிமை உமக்கே 2) கடையானேன் எண்ணாத
3) தம்மையே புகழ்ந்து 4) நீளநினைந்தடியேன்

27. குனித்த புருவமும்... என்ற பாடல் இடம்பெற்ற பண்
1) நட்டபாடை 2) தக்கேசி
3) பழம்பஞ்சுரம் 4) திருவருத்தம்

28. திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
1) 8ம் திருமுறை 2) 9ம் திருமுறை
3) 10ம் திருமுறை 4) 11ம் திருமுறை

29. இராவணன் மேலது நீறு எனப் பாடியவர்
1) சம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

30. சிறுதெய்வ வழிபாடு பற்றி கூறும் நூல் தொகுதி
1) ஆகமம் 2) புராணம் 3) பத்ததிகள் 4) வேதங்கள்

31. தமிழில் மகாபாரதத்தை பாடியவர்?
1) நம்மாழ்வார் 2) வான்முகி
3) வசிட்டர் 4) வில்லிபுத்தூர் ஆழ்வார்

32. பஞ்சாங்கம் தோற்றம் பெற்ற காலம்?
1) சோழர்காலம் 2) குப்தகாலம்
3) ஆரியர்காலம் 4) பல்லவர்காலம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

33. மகரசங்கிராந்தி என அழைக்கப்படும் பண்டிகை
   1) தைப்பொங்கல் 2) தீபாவளி
   3) ஆடிப்பிறப்பு 4) புதுவருப்பிறப்பு

34. சிவனடியார் வழிபாடு பற்றி குறிப்பிடும் தந்திரம்
   1) 9ம் தந்திரம் 2) 3ம் தந்திரம்
   3) 5ம் தந்திரம் 4) 7ம் தந்திரம்

35. ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனக் கூறியவர்?
   1) சேந்தனார் 2) தாயுமானவர்
   3) மாணிக்கவாசகர் 4) திருமூலர்

36. கட்டளை, துதி, மந்திரம் ஆகியவற்றை கொண்ட வேதம்
   1) இருக்கு 2) இசை 3) சாமம் 4) அதர்வனம்

37. சிவலிங்கத்தின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள உடுக்குப்போன்ற பீடம்
   1) இலிங்கம் 2) பாணம்
   3) தண்டு 4) ஆவுடையார்

38. இலங்கையில் மிக உயரமான கொடித்தம்பம் அமைந்துள்ள ஆலயம்
   1) ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரம் 2) மாமங்கப்பிள்ளையார்
   3) கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரம் 4) நயினை நாகபூசனி

39. தேர் செய்யப்பயன்படுத்தப்படும் மரங்கள் எவை?
   1) தேக்கு, வேம்பு, மருது 2) வேம்பு, பாலை, மருது
   3) மருது, பாலை, தேக்கு 4) தேக்கு, மருது, வேங்கை

40. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைக் கட்டியவர்?
   1) 4ம் புவனேகபாகு 2) சங்கிலிய மன்னன்
   3) 1ம் கஜபாகு 4) செம்பகப் பெருமான்

பகுதி - II

முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுு மாத்திரம் விடை எழுதுக.

(01) (1) சிவம் என்பதன் பொருள் யாது?
(2) நரக சதுர்த்தி என அழைக்கப்படும் பண்டிகை யாது?
(3) சனிபகவானால் பீடிக்கப்படாதவர்கள் இருவரும் யாவர்?
(4) வைரவர் சேத்ரபாலகர் என அழைக்கப்படுவதற்கான காரணம்?
(5) கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பூசை செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
(6) இலிங்க வழிபாடு செய்து வீடுபேரடைந்த நாயன்மார் இருவரைக் குறிப்பிடுக.

www.lkdu.lk

(7) ஆன்மாக்கள் அனுபவிக்கும் மூவகை வினைகளும் எவை?

(8) "பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" என்று பாடியவர் யார்? அவருக்கு வழங்கப்படும் சிறப்பு பெயர்கள்?

(9) இலக்கண சுந்தரியின் துயர்துடைக்க ஔவையார் அருளிய உபதேசம் யாது?

(10) திருமுறை என்பதன் பொருள் யாது? **(20 புள்ளிகள்)**

(02) பின்வரும் தேவாரங்களின் இரண்டினை வரிக்கிரகமாக எழுதி பொழிப்புரையை எழுதுக.

(1) அங்கமும் வேதமும்....

(2) உற்றுமை சேர்வது....

(3) தண்ணளி வெண்குடை...

(4) கற்றவர் விழுங்கும்... **(16 புள்ளிகள்)**

(03) மனித வாழ்வில் விழுமியங்கள் இன்றியமையாததாகும்.

(1) விழுமியம் என்றால் என்ன?

(2) வாய்மை பற்றி திருவள்ளுவர் கூறிய குறள் ஒன்று தருக.

(3) விழுமியத்தை கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் மூன்று தருக. **(08 புள்ளிகள்)**

(04) "மன்னுபவம் தீர்க்கும் மருந்து"

(1) திருவருட்பயன் குறிப்பிடும் பத்து அதிகாரங்களுள் நான்கு அதிகாரங்களை குறிப்பிடுக.

(2) நான்கு வேதங்களையும் மறுபெயர்களையும் குறிப்பிடுக.

(3) திருவருட்பயன் குறிப்பிடும் இறைவனின் இயல்புகள் எவை? **(08 புள்ளிகள்)**

(05) "பஞ்சாங்கம் பார்ப்பதில் சைவமக்கள் வாழ்க்கையுடன் இரண்டறக்கலந்த ஒன்றாகும்"

(1) பஞ்சாங்கத்தில் இடம்பெறும் முக்கிய ஐந்து உறுப்புகளும் எவை?

(2) முதல் பஞ்சாங்கம் எப்போது யாரால் கணிக்கப்பட்டது?

(3) இலங்கையில் நடைமுறையில் உள்ள பஞ்சாங்கங்கள் இரண்டும் எவை? **(08 புள்ளிகள்)**

(06) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(1) விநாயகசஷ்டி

(2) சாமவேதம்

(3) நாட்டார் கலைகள்

(4) சைவவித்தியா விருத்திச்சங்கம் **(08 புள்ளிகள்)**

(07) (1) ஆண்மாவை பீடித்துள்ள மும்மலங்கள் எவை?

(2) ஆணவமலத்தின் மறுபெயர்கள் இரண்டு தருக.

(3) ஆணவத்தின் இயல்புகளை குறிப்பிடுக.

நன்றி
வளர்மதி கல்விக் கழகம் **(08 புள்ளிகள்)**